

தஞ்சாவூர் மாவட்டம், ஆரிப்படை வீடு ஊராட்சி பம்பப்படையூரில் புதிய பொது விநியோக மையக்கட்டிடத்தை பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி குத்துவிளக்கேற்றி திறந்து வைத்தார். உடன் தஞ்சை வடக்கு மாவட்டச் செயலாளர் சு.கல்யாணசுந்தரம் எம்.பி., சாக்கோட்டை க.அன்பழகன் எம்.எல்.ஏ, திட்ட இயக்குனர் முனைவர் மு.பாலகிருஷ்ணன், மாவட்ட ஊராட்சிக்குழு துணைத் தலைவர் சு.க.முத்துசெல்வம், ஒன்றியக்குழு தலைவர் காயத்ரி அசோக்குமார், ஊராட்சி மன்ற தலைவர் ஜி.கல்யாணம் உள்ளிட்ட அரசு அதிகாரிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்.

### திரைப்படத் துறைக் கலைஞர்களின் உரிமைகளுக்காக வாதிட

# சண்டைப் பயிற்சியாளர்களுக்கு பாதுகாப்பு வாரியம் ஏற்படுத்துவீர்!

### மாநிலங்களவையில் - கழகக் குழுத் தலைவர் திருச்சி சிவா வலியுறுத்தல்!



புதுடெல்லி, ஆக. 9 - "திரைப்படத்துறை கலைஞர்களின் உரிமைகளுக்காக வாதிட சண்டைப் பயிற்சியாளர்களுக்கு பாதுகாப்பு வாரியம் ஏற்படுத்த வேண்டும்" என்று மாநிலங்களவையில் கழகக் குழுத் தலைவர் திருச்சி சிவா எம்.பி. வலியுறுத்தினார்.

இது குறித்து அவர் பேசியதாவது :-

நாட்டின் கவனத்திற்கு வராத ஒரு முக்கியமான பிரச்சினையை பற்றி எனக்கு இங்கு பேச வாய்ப்பளித்தமைக்கு நன்றி. இந்தியத் திரைப்படத் துறையில் மெய்சிலிர்க்க வைக்கும் சண்டைப் பயிற்சியாளர்கள் பலர் பணியாற்றி வருகின்றனர் . பரபரப்பான அதிரடி காட்சிகளை திரையில் கொண்டு வருவதற்கு அவர்கள் தங்களது ஈடு இணையற்ற செயல் திறனை திறமைகளை வெளிப்படுத்துகிறார்கள். தற்போது தமிழ்நாட்டில் 30 ஆண்டுகால அனுபவமிக்க மூத்த சண்டை பயிற்சியாளர் ஒருவர் மேடையில் இருந்து தவறி விழுந்து துயரமான முடிவு ஏற்பட்டு விட்டது . அவர்களின் பாதுகாப்பு கயிறு அறுந்ததே விழுந்ததற்கான காரணம் .இது ஒரு தனிப்பட்ட சம்பவமாக இருக்கலாம்.

ஆனால் அனைத்து கால கட்டங்களிலும் இந்த முக்கியமான சண்டை பயிற்சியாளர்கள் அனைவரும் பொருளாதார ரீதியாகவும் உடல் ரீதியாகவும் புறக்கணிக்கப்படுகிறார்கள். சண்டை பயிற்சியாளர்களின் பணி ஆபத்தாக இருந்தாலும் கூட அவர்கள் பாதுகாப்பு வலை இல்லாமல் வேலை செய்கிறார்கள். பிற கலைஞர்களும் அதை சாதாரணமாக எடுத்துக் கொள்கிறார்கள். கடுமையான பாதுகாப்பு கட்டுப்பாடுகள் படமாக்கும் தளங்களில் இல்லாததால் தடுக்கப்படக்கூடிய விபத்துக்கள் கூட உயிருக்கு ஆபத்தான கொடுங்காயங்கள் ஆகின்றன. இது அவர்களது உடல் நலத்திற்கு ஆபத்தை ஏற்படுத்தி அவர்களையும் அவர்களது குடும்பத்தையும் கடுமையான பொருளாதார நெருக்கடிக்கு ஆளாக்குகிறது.

வழக்கமான ஆய்வுகள், உயர்தரமான பாதுகாப்பு கருவிகள் கொடுத்தல் , சண்டை பயிற்சியாளர் மற்றும் அந்த குழுவுக்கு கடுமையான பயிற்சி அளித்தல் போன்ற விரிவான பாதுகாப்பு ஏற்பாடுகளை திரைப்படம் எடுக்கும் இடங்களில் செய்வது காலத்தின் கட்டாயம்.

இது போன்ற பாதுகாப்பு ஏற்பாடுகளை செய்வதற்கு அரசாங்கம் திரைத்துறை முதலீட்டாளர்களை ஊக்குவிக்கவும் ஊக்கப்படுத்தவும் செய்ய வேண்டும். உலகளவில் திரைப்படத் தொழில்கள் விரிவான பாதுகாப்பு வழிகாட்தல்கள் மற்றும் சண்டை பயிற்சியாளர்களுக்கான பிரத்யேக தொழிற்சங்கத்தைக் கொண்டுள்ளன. பாதுகாப்பு விதிமுறைகள் செயல்பாட்டை மேற்பார்வையிடவும் கலைஞர்களின் உரிமைகளுக்காக வாதிடவும் சண்டை பயிற்சி கலைஞர்கள் பாதுகாப்பு வாரியத்தை நிறுவுதல் உள்ளிட்ட இதேபோன்ற நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

இவ்வாறு திருச்சி சிவா பேசினார்.

### விலையில்லா வேட்டி சேலை - மாணவர்களுக்கான 4 செட் விலையில்லா

### பள்ளிச் சீருடைகள் வழங்கும் திட்டங்களில் 'சுணக்கம்' என எடப்பாடி குற்றச்சாட்டு!

# உண்மைக்குப் புறம்பான - அடிப்படை ஆதாரமற்ற வதந்திகளைப் பரப்புவதா?

### ஆதாரங்களுடன் – அமைச்சர் ஆர்.காந்தி மறுப்பறிக்கை! கண்டனம்!



**சென்னை, ஆக. 9 - 'விலையில்லா வேட்டி, சேலை மற்றும் மாணவர்களுக்கான 4 செட் விலையில்லா பள்ளி சீருடைகள் வழங்கும் திட்டங்களில் சுணக்கம்' என்னும் தலைப்பில் சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிசாமியின் அறிக்கையில் கூறப்பட்டுள்ள உண்மைக்கு மாறான தகவல்களை மறுத்து கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சர் ஆர். காந்தி விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-**

சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி கே.பழனிசாமியின் 5.8.2024 தேதியிட்ட அறிக்கையில் வேட்டி சேலை வழங்கும் திட்டத்தின்கீழ் இதுவரை ஒருமுறை கூட குறித்த காலத்தில் பொங்கல் பண்டிகைக்கு முன்னதாக விலையில்லா வேட்டி சேலைகளை பயனாளிகளுக்கு வழங்கவில்லை என்றும், பள்ளிச் சீருடை வழங்கும் திட்டத்தின்கீழ் மாணவர்களுக்கு 4 செட் சீருடைக்கு பதில் 3 செட் சீருடைகள் மட்டுமே வழங்கப்பட்டுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன என்றும். குறித்த காலத்தில் பள்ளி மாணவர்களுக்கு 4 செட் சீருடைகளை உடனடியாக வழங்கவும். விலையில்லா வேட்டி, சேலைகளை பொதுமக்களுக்கு பண்டிகை காலங்களில் குறித்த நேரத்தில் வழங்கிடவும், விலையில்லா வேட்டி. சேலை மற்றும் சீருடைகள் நெய்வதற்கான வேலைகளை தமிழக நெசவாளர்களுக்கு மட்டும் வழங்கிடவும். இதன்மூலம் தமிழக நெசவாளர்களின் வாழ்க்கை ஒளிரச் செய்யும் நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் வலியுறுத்தியுள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேற்படி அறிக்கையின் மீதான மறுப்பு அறிக்கைக்கான குறிப்பு பின்வருமாறு சமர்ப்பிக்கப்படுகிறது.

**பள்ளிச்சீருடை வழங்கும் திட்டம்**

அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவியர்களுக்கு சீருடை வழங்கும் திட்டத்தை அரசு ஆண்டுதோறும் செயல்படுத்தி வருகிறது. இத்திட்டத்தின்கீழ் 1ஆம் வகுப்பு முதல் 8ஆம் வகுப்பு வரை பயிலும் சத்துணவுத் திட்டத்தின் கீழுள்ள மாணாக்கர்கள் பயன் பெறுகின்றனர். ஒவ்வொருஆண்டும் மாணாக்கர்களுக்கு 4 இணை சீருடைகள் இத்திட்டத்தின்கீழ் வழங்கப்பட்டு வருகின்றன.

பள்ளிக் கல்வித்துறை மற்றும் சமூக நலத் துறையால் வழங்கப்படும் துணித் தேவையின் அடிப்படையில், இத்திட்டத்திற்கு தேவையான சீருடை துணிகள் கைத்தறி துறையால் உற்பத்தி செய்யப்பட்டு, சமூக நலத் துறையால் தைக்கப்பட்டு, பள்ளிக் கல்வித் துறையால் மாணவ மாணவியர்களுக்கு விநியோகம் செய்யப்படுகிறது.

2023-2024ஆம் கல்வியாண்டில் ரூ.408.63 கோடி மதிப்பிலான 534.84 இலட்சம் மீட்டர் சீருடைத் துணி இரகங்கள் உற்பத்தி செய்யப்பட்டு, சமூக நலத் துறையால் சீருடைகளாக தைக்கப்பட்டு, பள்ளி கல்வித் துறையின் மூலம் பள்ளிக் குழந்தைகளுக்கு விநியோகம் செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் 41,35,479 மாணாக்கர்கள் (மாணவர்கள் 20,57,931 + மாணவிகள் 20,77,548) பயனடைந்துள்ளனர்.

2024-2025ஆம் கல்வியாண்டுக்கு சீருடை வழங்கும்திட்டத்தைத் தொடர்ந்து செயல்படுத்த 07.02.2024 அன்று அரசாணை பிறப்பிக்கப்பட்டு, இதுவரை முன்பணமாக ரூ.250 கோடி விடுவிக்கப்பட்டுள்ளது. நடப்பாண்டு திட்டத்திற்கு சமூக நல ஆணையரின் 18.04.2024 நாளிட்ட கடிதத்தின்படி இரண்டு இணை சீருடைக்கு தேவையான துணி விபரங்கள் வழங்கப்பட்டுள்ளது.

இதன்படி, நடப்பாண்டு சீருடை துணி உற்பத்திக்குத்தேவையான நூல் இரகங்கள் கூட்டுறவு நூற்பாலைகளிடமிருந்தும், தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளி சட்டம் 1998 மற்றும் விதிகள் 2000 ஆகியவற்றைப் பின்பற்றி ஒப்பந்தப்புள்ளிதாரர்களிடமிருந்தும் கொள்முதல் செய்யப்பட்டு, கைத்தறி மற்றும் விசைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் மூலம் நான்கு இணைச் சீருடைத் துணி உற்பத்தி செய்யப்பட்டு, நிறைவடையும் தருவாயில் உள்ளது.

நாளது தேதியில் சமூக நலத்துறையால் கோரப்பட்டுள்ள மேற்படி இரண்டு இணை சீருடை துணி 237.98 இலட்சம் மீட்டர்கள் முழுவதுமாக உற்பத்தி செய்யப்பட்டு மாவட்டங்களில் உள்ள சமூக நலத்துறையின் துணி வெட்டும் மையங்களுக்கு 26.06.2024ற்குள் 100% அனுப்பி வைக்கப்பட்டு சீருடை துணி விநியோகம் கைத்தறி துறையால் நிறைவு செய்யப்பட்டுள்ளது.

சமூக நலத் துறையால் கோரப்பட்டுள்ள இரண்டு இணை சீருடை துணித் தேவை (இலட்சம் மீட்டரில்) டிரில் 49.47., சார்டிங் 102.51 கேஸ்மென்ட் 86.00. மொத்தம் 237.98

சமூக நலத் துறைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள இரண்டு இணை சீருடை துணி அளவு (இலட்சம் மீட்டரில்)

டிரில் 49.47, சாடிங் 86.00, கேஸ்மென்ட்102.51, மொத்தம் 237.98

மேற்படி அனுப்பப்பட்டுள்ள துணிகளைக் கொண்டு சமூக நலத்துறையால் சீருடைகள் தைக்கப்பட்டு, பள்ளிக் கல்வித் துறையால் மாணவ மாணவியர்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது. சீருடைகள் தைக்கும் பணிகள் சமூக நலத் துறையால் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும், மூன்றாவது மற்றும் நான்காவது இணை சீருடை களுக்கான துணித் தேவைப்பட்டியல் சமூக நலத்துறை ஆணையரிடமிருந்து எதிர்நோக்கப்படுகிறது.

எனினும், முதல் இரண்டு இணை சீருடைக்கு ஏற்கனவே வழங்கப்பட்டுள்ள துணித் தேவை பட்டியலை அடிப்படையாகக்கொண்டு, அதே அளவிற்கு மூன்று மற்றும் நான்காவது இணை சீருடை உற்பத்தி மேற்கொள்வதற்கான உற்பத்தி திட்டம் கைத்தறி மற்றும் விசைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களுக்கு ஏற்கனவே வழங்கப்பட்டு, மூன்றாவது இணைச் சீருடை துணி உற்பத்தி முழுவதுமாக முடிக்கப்பட்டுள்ளது, நான்காவது இணைச் சீருடை உற்பத்தி முடிவடையும் தருவாயில் உள்ளது.

மேலும், 05.08.2024 வரை மூன்றாவது இணை சீருடைக்கு தேவையான டிரில் இரக சீருடை துணி 47%மும், கேஸ்மென்ட் இரக சீருடை துணி 56%மும் சர்டிங் இரக சீருடை துணி 38%மும் மாவட்டங்களில் உள்ள சமூக நலத்துறையின் துணி வெட்டும் மையங்களுக்கு பின்வருமாறு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

மூன்றாவது இணை சீருடை துணி உத்தேச தேவை அளவு (இலட்சம் மீட்டரில்) டிரில் - 24.74, கேஸ்மெண்ட் - 43.00, சர்டிங்- 51.25, மொத்தம் - 118.99

சமூக நலத்துதுறைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள டிரில் - 11.70, கேஸ்மெண்ட் - 23.93, சர்டிங் - 19.64, மொத்தம் - 55.27

மூன்றாவது இணை சீருடைத்துணிக்கு தேவையான சீருடைத் துணிகள் உற்பத்தி 100% நிறைவு செய்யப்பட்டுள்ளது. இதைப்போன்று நான்காவது இணைச் சீருடை துணிகள் 80% நிறைவு செய்யப்பட்டுள்ளதுடன் எஞ்சிய துணிகள் உற்பத்தி செய்யும்பணிகள் விரைவில் முடிவடையும் தருவாயில் உள்ளது.

எனினும், மாவட்டங்களில் உள்ள சமூக நலத்துறையின் துணி வெட்டும் மையங்களில் நான்கு இணை சீருடைத் துணிகளை கையாள்வதற்கு இடப்பற்றாக் குறை இருப்பதாக துணி வெட்டும் மைய பொறுப்பாளர்களால் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே சமூக நலத்துறையின் தேவையின் அடிப்படையில், மூன்று மற்றும் நான்காவது இணைக்கான சீருடை துணிகள் சமூக நலத்துறைக்கு உடனுக்குடன் அனுப்பி வைக்கப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

மாணவ, மாணவியர்களுக்கு சீருடை வழங்குவதில் காலதாமதம் ஏற்படக்கூடாது என முதலமைச்சர் அவர்கள் அறிவுறுத்தியதற்கிணங்க எந்தவிதமான தொய்வுமின்றி சீருடை வழங்கும் பணிகள் நடைபெற்று வருகிறது.

கடந்த ஐந்து ஆண்டுகளில் இரண்டு இணை சீருடைத் துணிகள் ஜூலை மாதத்திலேயே வழங்கப்பட்டுள்ளது. எனினும், நடப்பாண்டில் இரண்டு இணை சீருடைத் துணிகள் முன் எப்போதும் இல்லாத வகையில் 26.06. 2024க்கு முன்னர் உற்பத்தி செய்து சமூக நலத்துறைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கதாகிறது.

இந்த அரசினுடைய செயல்பாட்டினை ஒப்பு நோக்கும்போது கடந்த அரசு குறித்த காலத்திற்குள் சீருடைத் துணிகளையும், இலவச வேட்டி சேலைகளையும் வழங்கியதில்லை.

கல்வியாண்டுகளில் இரண்டு இணை சீருடைத் துணிகள் சமூக நலத்துறைக்கு வழங்கப்பட்ட நாள்

2019 - 2020 - 31.07.2019
2020- 2021 - 23.07.2020
2021-2022 - 24.07.2021
2022-2023 - 28.07.2022
2023-2024 - 16.07.2023
2024-2025 - 26.06.2024

மேலும், சீருடைத் துணி உற்பத்திக்குத் தேவையான 2/40s பாலிகாட் நூல் முழுவதுமாக கூட்டுறவு நூற்பாலைகளிலிருந்தும், 40s பருத்தி நூல், 130D பாலியஸ்டர் நூல் மற்றும் 155D பாலியஸ்டர் நூல் தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சட்டம் 1998 மற்றும் விதிகள் 2000 னை பின்பற்றி ஒப்பந்தப்புள்ளிதாரர்களிடமிருந்தும் கொள்முதல் செய்யப்படுகிறது. இவ்வாறு கொள்முதல் செய்யப்படும் நூல்கள் அனைத்தும் அரசு நூல் கிடங்குகளிலிருந்து இந்திய அரசின் கட்டுப்பாட்டின்கீழ் இயங்கும் அங்கீகரிக்கப்பட்ட தரப்பரிசோதனை மையங்களான SITRA / Powerloom Service Centre / Textile Committee இல் தரப்பரிசோதனை மேற்கோள்ளப்பட்டு, அதில் தேர்ச்சி ஆகும் தரமான நூல் மட்டுமே துணி உற்பத்திக்காக நெசவாளர் கூட்டுறவு சங்கங்களுக்கு வழங்கப்படுகிறது.

எனவே,நெசவாளர்களைப் பொறுத்தவரையில் நான்கு இணைச் சீருடைக்கான உத்தேச துணித் தேவையின் அடிப்படையில் நான்கு இணைச் சீருடை உற்பத்திக்கான உற்பத்தித் திட்டம் மற்றும் அதற்குத் தேவையான தரமான நூல் முழுவது மாக நெசவாளர் கூட்டுறவு சங்கங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது என்றும், நாளது தேதியில் இரண்டு இணை சீருடைக்குத் தேவையான துணிகள் முழுவதுமாக கைத்தறி துறையால் அனைத்து மாவட்ட சமூக நலத்துறையின் துணி வெட்டும் மையங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது என்றும், சமூக நலத் துறையால் சீருடைகள் தைக்கப்பட்டு பள்ளிக் கல்வித் துறையால் மாணவர்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது என்றும், சமூக நலத்துறையின் தேவையின் அடிப்படையில் மூன்றாவது மற்றும் நான்காவது இணை சீருடைக்கான துணிகள் உடனுக்குடன் அனுப்புவதற்கு தயார் நிலையில் உள்ளது என்றும் சமர்ப்பிக்கப்படுகிறது.

**வேட்டி சேலை வழங்கும் திட்டம் :**

வேட்டி சேலை வழங்கும் திட்டத்தின்கீழ் தமிழ்நாட்டில் ஏறத்தாழ 2,664 கைத்தறி நெசவாளர்கள், 11,124 பெடல் தறி நெசவாளர்கள்மற்றும் 41,983 விசைத்தறி நெசவாளர்களுக்கு தொடர் வேலைவாய்ப்பு வழங்கப்படுகிறது.

2023-2024ஆம்ஆண்டில்பொங்கல் 2024 பண்டிகைக்கு 1.77 கோடி சேலைகள்மற்றும் 1.77 கோடி வேட்டிகளைவழங்குவதற்கானஅரசாணை பிறப்பிக்கப் பட்டு, திட்டத்தைச் செயல்படுத்த முன்பணமாக ரூ.449.47 கோடியினை அரசு விடுவித்து வழங்கியது. வருவாய் நிருவாக ஆணையரகம் வழங்கிய தேவை பட்டியலின் அடிப்படையில், கைத்தறி மற்றும் விசைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களால் சேலைகள் மற்றும் வேட்டிகள் உற்பத்தி செய்து விநியோகம் செய்யப்பட்டுள்ளது.

கடந்த ஆட்சிக் காலத்தில், வேட்டி சேலை வழங்கும் திட்டத்தின்கீழ் வேட்டி சேலைகள் இதுவரை பொங்கல் பண்டிகைக்கு முன்னர் முழுமையாக பயனாளிகளுக்கு வழங்கப்பட்டதில்லை. பெரும்பாலும் பிப்ரவரி அல்லது மார்ச் திங்களில் வேட்டி சேலைகள் மாவட்டங்களில் உள்ள தாலூக்காக்களுக்கு அனுப்பப்பட்டுள்ளது. குறிப்பாக, பொங்கல் 2012 மற்றும் பொங்கல் 2014 திட்டங் களுக்கு மிகவும் காலதாமதமாக முறையே அக்டோபர் 2012 திங்களிலும், ஆகஸ்ட் 2014 திங்களிலும் தாலூக்காக்களுக்கு அனுப்பப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

இந்த அரசு பொறுப்பேற்றவுடன் முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க சீரிய முயற்சிகளினாலும் தொடர் நடவடிக்கைகளினாலும் பொங்கல் 2024 திட்டத்திற்கான வேட்டி சேலைகள் முழுவதும் தமிழ்நாட்டிலுள்ள நெசவாளர் கூட்டுறவு சங்கங்களைச் சார்ந்த கைத்தறி, பெடல்தறி மற்றும் விசைத்தறி நெசவாளர்களால் தரமாக உற்பத்தி செய்யப்பட்டு, 31.12.2024க்கு முன்னர் அனைத்து தாலூக்காக்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டு, முன்னெப்போதும் இல்லாத வகையில் பொங்கல் பண்டிகைக்கு முன்னர் பொது மக்களுக்கு விநியோகம் செய்து திட்டம் குறித்த காலத்தில் நிறைவு செய்யப்பட்டது. பொங்கல் பண்டிகைக்கு முன்னர் தரமான வேட்டி சேலைகளை பொது மக்களுக்கு விநியோகம் செய்தது பொதுமக்களால் வெகுவாகப் பாராட்டப்பட்டது.

'பொங்கல் 2025' திட்டத்தை மேலும் செம்மையாக செயல்படுத்துவதற்கான ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு, தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையின் படி இத்திட்டத்திற்கான அரசாணை வெளியிடப்படும் தருவாயில் உள்ளது. அரசாணை வெளியிடப்பட்டவுடன் வேட்டி சேலை உற்பத்திக்கு தேவையான நூல்கள் கூட்டுறவு நூற்பாலை களிடமிருந்தும், தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சட்டம் 1998 மற்றும் விதிகள் 2000 னைப் பின்பற்றி ஒப்பந்தப்புள்ளிதாரர்களிடமிருந்தும் கொள்முதல் செய்து, இந்திய அரசின் அங்கீகரிக்கப்பட்ட தரப்பரிசோதனை மையங்களில் நூல் மாதிரிகள் தரப் பரிசோதனை செய்யப்பட்டு, தமிழ்நாட்டிலுள்ள கைத்தறி மற்றும் விசைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களைச் சார்ந்த கைத்தறி, பெடல்தறி மற்றும் விசைத்தறி நெசவாளர்களால் தரமான நூல்களைக் கொண்டு வேட்டி சேலைகள் முழுவதும் உற்பத்தி செய்யப்படவுள்ளது. நூல் கொள்முதல் செய்வதற்கான ஒப்பந்தப் புள்ளிகள் ஓரிரு தினங்களில் கோருவதற்கான பூர்வாங்கப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. கடந்த ஆண்டைப் போன்று நடப்பாண்டிலும் 31.12.2024க்கு முன்னர் வேட்டி சேலை உற்பத்தியினை முடித்து பொங்கல் பண்டிகைக்கு முன்னர் பொது மக்களுக்கு வேட்டி சேலைகள் வழங்குவதற்கான அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது எனத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க பள்ளிக் குழந்தைகளுக்கான சீருடைத் திட்டம் மற்றும் இலவச வேட்டி, சேலை ஆகியவற்றை சீரும் சிறப்புமாக எந்தவிதமான புகார்களுக்கும் இடமின்றி வழங்குவதன் மூலமாக தமிழ்நாட்டில் உள்ள 2,664 கைத்தறி நெசவாளர்கள், 11,124 பெடல்தறி நெசவாளர்கள் மற்றும் 41,983 விசைத்தறி நெசவாளர்கள் ஆக மொத்தம் 55,771 நெசவாளர் குடும்பங்களுக்கு ஆண்டு முழுவதும் தொடர் வேலைவாய்ப்பு வழங்கி வருகிறது. இதன் மூலம் இந்த நெசவாளர் குடும்பங்கள் அனைத்தும் பயன் பெற்று வருகின்றன.

முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான இந்த அரசு பொறுப்பேற்றது முதல் நெசவாளர்களின் நலனையும் வேறு எந்த அரசை விடவும் அதிகபட்ச அக்கறையுடன் அவர்களின் நலனை தொடர்ந்து பேணிப் பாதுகாத்து வருகிறது எனத் தெரிவித்துக் கொள்கிறேன்.

எனவே உண்மைக்குப் புறம்பான அடிப்படை ஆதாரமற்ற தேவையற்ற வதந்திகளை பரப்பும் நோக்கமுடன் செய்திகளை வெளியிடுவது பொறுப்பான அரசியல் தலைவருக்கு அழகல்ல.

இவ்வாறு அமைச்சர் ஆர்.காந்தி, தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.



கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் ரயில் நிலையம் அமைத்து பொதுமக்களின் பயன்பாட்டிற்குக் கொண்டு வர வேண்டும் என்பது பொதுமக்களின் நீண்ட நாள் கோரிக்கையாக உள்ளது, இந்நிலையில் கள்ளக்குறிச்சி நாடாளுமன்ற உறுப்பினர் தே.மலையரசன் நேற்று முன்தினம் ஒன்றிய ரயில்வே துறை அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவை புதுடெல்லியில் நேரில் சந்தித்து அது குறித்து கோரிக்கை மனுவினை அளித்தார்.

### பணி நியமனத்தில் பாதிப்பு!

# இரயில்வே தேர்வு வாரிய விதியை திரும்பப் பெறுவீர்!

### மக்களவையில் - டாக்டர் கலாநிதி வீராசாமி வலியுறுத்தல்!



புதுடெல்லி, ஆக. 9 - மக்களவையில் நேரமில்லா நேரத்தின்போது வடசென்னை நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் கலாநிதி வீராசாமி பேசும்போது இரயில்வே பணிகளுக்கான தேர்வு வாரியம், அரசின் சாதிவாரி இட ஒதுக்கீட்டுக் கொள்கைக்கு எதிராக புதிய விதி சேர்த்துள்ளதாகவும் அதனால் இரயில்வே பணி நியமனத்தில் பாதிக்கப்படும் நிலைமை ஏற்படுவதால் அந்த விதியை திரும்ப பெற ஆணையிடும்படி கேட்டுக் கொண்டார்.

மேலும் அவர் பேசியதாவது :

சமீபத்தில் இரயில்வே தேர்வு வாரிய அதிகாரிகள் அரசின் இட ஒதுக்கீட்டுக் கொள்கைக்கு எதிராக ஒரு விதியை அறிவிப்புள்ளனர். இது அரசியல் சட்டம் வகுத்துள்ள இட ஒதுக்கிட்டுக் கொள்கையை தகர்க்கும் வகையில் அமைந்துள்ளது. இந்த புதிய விதியின்படி, பட்டியல் இனத்தவரும், பட்டியல் மலைவாழ் மக்களும், ஓ.பி.சி எனப்படும் பிற்படுத்தப்பட்டவர்களும், இரயில்வே துறைக்குப் பணியாளர்கள் தேர்வு தொடுக்கும்போது, பொதுபட்டியல் மற்றும் யாருக்கும் ஒதுக்கப்படாத பணி இடங்களுக்கான பட்டியலின் கீழ் சேர்க்கப்பட்டுள்ள பணியிடங்களுக்குப் போட்டியிட இயலாத நிலை ஏற்பட்டுள்ளது கடந்த பொதுத் தேர்தலுக்கு முன் கூட இத்தகைய புது விதியை, இரயில்வே தேர்வு வாரிய அதிகாரிகள் கொண்டுவர முயற்சி செய்தனர்.

அப்போது இது குறித்து அன்றைய இரயில்வே துறை அமைச்சரின் கவனத்திற்கு கொண்டு சென்று முறையிடப்பட்ட தால் இந்த புதிய விதி திரும்பப் பெறப்பட்டது. தற்போது, முடிவுற்று, மீண்டும் அரசு அமைக்கப்பட்டுள்ள நிலையில் இந்த விதியை மீண்டும் அமல்படுத்த இரயில்வே தேர்வு வாரிய அதிகாரிகள் முயற்சிக்கின்றனர், ஏனவே, இதனை நான் மீண்டும் தற்போதைய இரயில்வே அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு வர விரும்புகின்றேன்.

இரயில்வே அமைச்சர் அவர்கள், இவ் விதியைத் திரும்பப் பெற தக்க ஆணை வெளியிடக் கோருன்றேன். புதிதாக, இரயில்வே தேர்வு வாரியம் கொண்டுவர முயற்சிக்கும் இந்த விதியின் படி இரண்டாம் நிலை கம்ப்யூட்டர் தேர்வுக்கு இட ஒதுக்கிட்டு கொள்கையின் படி பட்டியல் பிரிவு, பட்டியல் மலைவாழ் மக்கள் பிரிவு, மற்றும் ஓ.பி.சி (மிக பிற்படுத்தப்பட்டவர்கள்) பிரிவில் கீழ் தேர்ந்தெடுக்கப்பட்ட விண்ணப்பதா ரர்கள், அடுத்த கட்ட தேர்வுகளுக்கு அந்தந்த பிரிவிலுள்ள காலி இடங்களுக்கான பணியிடங்களுக்கு மட்டுமே போட்டியிட முடியும் என்று கூறப்பட்டு ள்ளது.

இதனால் பட்டியல் இன மற்றும் பிற்படுத்தப் பட்ட பிரிவினை சேர்ந்தவர்களும், பொது பட்டியலில் வெளியிடப்பட்டுள்ள பணி இடங்களுக்கு போட்டியிடாத இயலாத நிலை உண்டாகிறது எனவே சட்ட விதியை திரும்ப பெறுவதுடன் இந்த விதியை புகுத்த விரும்பும் இரயில்வே தேர்வு வாரிய அதிகாரிகளின் மீது தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு டாக்டர் கலாநிதி வீராசாமி எம்.பி பேசினார்.



தமிழினத் தலைவர், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களது ஆறாவது ஆண்டு நினைவு நாளையெட்டி கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட திமுக சார்பாக மாவட்டச் செயலாளரும், சட்டமன்ற உறுப்பினருமான மதியழகன் தலைமையில் கிருஷ்ணகிரி, பெங்களூர்சாலை, சென்ட்ரல் தியேட்டர் அருகில் இருந்து அமைதி ஊர்வலம் சென்று ராயக்கோட்டை சாலை மேம்பாலம் அருகே உள்ள முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் அவர்களது திருஉருவச் சிலைக்கு மாலை அணிவித்து மலர்தூவி மரியாதை செலுத்தப்பட்டது. இந்த நிகழ்ச்சியில் மாநில அமைப்பு சாரா ஓட்டுநர் அணி செயலாளர் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் செங்குட்டுவன், மாவட்ட அவைத் தலைவர் நாகராஜ் மாவட்ட துணை செயலாளர் கோவிந்தசாமி, சந்திரன், பொருளாளர் கதிரவன், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் பரிதா நவாப், செந்தில், கிருபாகரன், பொதுக்குழு உறுப்பினர்கள் அஸ்லாம், நாகராசன், சித்ரா சந்திரசேகர், பாலன், கோதண்டன், கிருஷ்ணகிரி நகர செயலாளர் நவாப், ஒன்றிய செயலாளர்கள் கோவிந்தன், தனசேகரன், தேங்காய் சுப்பிரமணி மகேந்திரன், சாந்தமூர்த்தி, அறிஞர் ராஜேந்திரன், குணவசந்தரசு, நரசிம்மன், எக்கூர் செல்வம், குமரேசன், ரஜினி செல்வம், பேரூர் கழக செயலாளர்கள் பாபு , தம்பிதுரை, வெங்கடப்பன், பேரூர் கழக பொறுப்பாளர் பார்த்திபன் பர்கூர் சட்டமன்ற பொறுப்பாளர் அன்பரசன், மற்றும் கே.வி.எஸ் சீனிவாசன் உள்ளிட்ட தி.மு.க. நிர்வாகிகள், தொண்டர்கள் கலந்து கொண்டு மௌன அஞ்சலி செலுத்தினார்கள்.



கள்ளக்குறிச்சி சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட கள்ளக்குறிச்சி நகரத்தைச் சேர்ந்த சுதாகர் என்பவரின் மகளும், கள்ளக்குறிச்சி அரசு மாதிரி பெண்கள் மேல்நிலைப் பள்ளியின் ஒன்பதாம் வகுப்பு மாணவியுமான, வீராங்கனை சு.நட்சத்திரா அண்மையில் விசாகப்பட்டினத்தில் நடைபெற்ற 7வது தேசிய அளவிலான டேங்வாண்டோ விளையாட்டு போட்டியில் கலந்து கொண்டு தங்கப்பதக்கம் வென்றதைத் தொடர்ந்து, கள்ளக்குறிச்சி தெற்கு மாவட்ட கழக செயலாளரும், ரிஷிவந்தியம் தொகுதி சட்டமன்ற உறுப்பினருமான வசந்தம் க.கார்த்திகேயனை மாவட்டக் கழக அலுவலகத்தில் தனது தாய் தந்தையுடன் நேரில் சந்தித்து வாழ்த்துக்களை பெற்றார்.